2016 ஆகஸ்ட் 17]

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***1288—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதி, உப்பிலியாபுரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நடப்பு கொள்முதல் பருவம் 2015–2016–ல் திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறாததால், நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஸ்டாலின் குமார், உங்களுடைய இடத்தில்தான் இருக்கிறீர்களா?*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இடத்தில்தான் இருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய இடத்தில்தான் நிற்கிறீர்களா என்று கேட்டேன். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் 18*

ஊராட்சிகள் மற்றும் 71 கிராமப் பகுதிகள் உள்ளன. கொல்லிமலையிலிருந்துவரும் நீர் புளியஞ்சோலை வழியாக இந்த இடத்திற்கு வருகிறது. இங்கு இயற்கையாக மழை பெய்தால் மட்டுமே விவசாயம் சிறப்பாக நடைபெறும். சுமார் ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். ஆலத்துடயான்பட்டி, உப்பிலியாபுரம், பச்சப்பெருமாள்பட்டி, பி.மேட்டூர், சிறுநாவலூர், வைரிசெட்டிபாளையம், கோட்டப்பாளையம், விசுவாம்பாள் சமுத்திரம், கொப்பம்பட்டி, சோபனாபுரம், எரகுடி, நாகநல்லூர், மாராடி, வெங்கடாசலபுரம், ஒக்கரை ஆகிய பகுதிகளில் மாசிப் பட்டம் எனப்படும் குறுவை நெல் சாகுபடி பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடவு செய்யப்பட்டு, மே மற்றும் ஜுன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. CR 1009, ADT 43, ADT 36 ரக நெல் பயிர் செய்யப்பட்டு, அறுவடை செய்யப்படுகிறது.

அதேபோல, ஆடிப் பட்டம் எனப்படும் நெல் சாகுபடி, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் நடவு செய்யப்பட்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. சம்பா நெல் சாகுபடி செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடவு செய்யப்பட்டு, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. எனவே, இந்தப் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 40 ஆண்டு கால நெல் கொள்முதல் வரலாற்றில் மிக அதிகபட்சமாக 1,808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, நெல் கொள்முதல் செய்த தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 17]

அதுமட்டுமல்லாமல், அதிக அளவில் நெல் சாகுபடி பரப்பளவு மற்றும் கொள்முதல் அதிகம் நடைபெறும் ஆந்திர மாநிலத்தில் நடப்பு கொள்முதல் பருவத்தில், 1,125 நெல் கொள்முதல் நிலையங்கள்தான் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுவரை தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து 17,08,336 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, ஊக்கத் தொகையாக 106 கோடியே 24 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் மட்டும் 45 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 28,484 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதில் துறையூர் வட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிற பி. மேட்டூர், ஆலத்துடயான்பட்டி மற்றும் எரகுடி ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 8,810 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகள் உப்பிலியாபுரத்திற்கு மிக அருகில் உள்ளதாலும், உப்பிலியாபுரம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டி கோரிக்கை ஏதும் வரப்பெறாததாலும், நடப்பு கொள்முதல் பருவத்தில் உப்பிலியாபுரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. இனி வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இடங்களில், விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவை என கோரிக்கை வரப்பெற்றால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி–IW , ஆந்திரா பொன்னி DBT 5204, ADT 43 சீரக சம்பா ஆகிய நெல் ரகங்கள் விளைவிக்கப்படுகின்றன. 7,000 ஹெக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது. அதாவது 17,500 ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது. இந்தப் பகுதிகளில் விளையும் விவசாய

விளைபொருட்களுக்கு உரிய விலையினை விவசாயிகள் பெறுவதற்கு ஏதுவாக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதிகளில் 1,00,000—க்கும் மேற்பட்டோர் விவசாயத்தை நம்பி இருப்பதாகத் தெரிவித்து, அந்தப் பகுதிகளிலே விளைகிற நெல் ரகங்களைப் பற்றியெல்லாம் இங்கே பட்டியலிட்டார்கள். அது மாசிப் பட்டமாக இருந்தாலும் சரி, குறுவையாக இருந்தாலும் சரி, சம்பாவாக இருந்தாலும் சரி அல்லது கோடைக் குறுவையாக இருந்தாலும் சரி, எல்லா நெல்லையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு முழுவதும் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கடந்த காலங்களில் கொள்முதல் செய்யப்படாமல் இருந்த TKM 9 என்கிற நெல்லையும், சிவகங்கை பகுதியில் விளைகிற ஜோதி என்கிற நெல்லையும், சிதம்பரம், சீர்காழி போன்ற பகுதிகளில் விளைகின்ற குந்தாலி என்கிற நெல்லையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரில்தான் அன்றைக்கு கொள்முதல் செய்யப்பட்டது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் நடைமுறையிலிருந்த ஏகபோக நெல் கொள்முதல் திட்டம், லெவி கொள்முதல் திட்டம், இணை கொள்முதல் திட்டம் ஆகியவற்றில் விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எல்லாம் போக்குகிற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினை 1—10—2002

2016 ஆகஸ்ட் 17]

ஆம் ஆண்டு கொண்டு வந்து, சாதாரண விவசாயிகள் எல்லோரும் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தங்களுடைய நெல்லை விற்பனை செய்வதற்கு வழிவகை செய்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் நெல் வரத்து, சாகுபடி ஆகியவற்றை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஆங்காங்கே, தேவைக்கேற்ப, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துகொள்ளலாம் என்ற உத்தரவினையும், அனுமதியினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கவுள்ளார்கள். ஆய்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

வீட்டுமனைப் பட்டா

***2559—டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தாப்பட்டி கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், திருக்கூர்ணம் கிராமம், (உட்கடை சீத்தாப்பட்டி) நத்தம் புல எண்.532/3 மொத்த விஸ்தீரணம் 0.35.44